# சாரணியம் வாழ்க!

**2021** மே மாதம் 7ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றப் பிறகு, எனக்கு முன்னால் இருந்த மிகப்பெரிய மீள்கட்டமைப்புப் பணியாக சாரணர் இயக்கப் பணிகள் இருந்தது.

முந்தைய ஆட்சியினரால் கண்டுக்கொள்ளப்படாமல் இருந்த சாரணர் இயக்கம் பிற்போக்குவாதிகளின் கைகளுக்கும் சென்றுவிடும் அபாயம் இருந்தது. 2011 முதல் 2021 ஆட்சிமாற்றம் வரையிலும் சாரணர் இயக்கத்தைப் பற்றிய நற்செய்திகள் எதுவும் பிரபலம் ஆனதாக தெரியவில்லை. பிற்போக்குவாதிகளும், ஆர்.எஸ்.எஸ். காரர்களும் புகுந்து தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தை நிலைகுலைய செய்ய முயன்றார்கள். ஆனால் மாநிலத் தலைவருக்காக நடைபெற்ற தேர்தலில் அவர்கள் தோல்வியுற்றார்கள் போன்ற செய்திகள்தான் அதிகளவில் பேசப்பட்டது.

அன்பையும், நேர்மையையும், எளிமையையும் பின்பற்றும் சாரணர்களின் மீது அன்பு செலுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி அமைந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு இட்டகட்டளைஎன்பது 'சாரணர் இயக்கத்தை மீள்கட்டமைப்பு செய்ய வேண்டும்' என்ற ஒற்றை வரி கட்டளைதான். அதற்குள் ஆயிரம் கட்டளைகள் இருப்பதை நான் புரிந்துகொண்டேன்.

முதல் கட்டமாக தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தினருடன் அமர்ந்து பேசினோம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களைச் சந்தித்து உரையாடினோம். கடற்கரை சாலையில் அமைந்துள்ள இயக்கத்தின் மாநில தலைமையகத்தில் நடைபெற்ற விழாக்களில் கலந்துகொண்டோம். 'நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்' எனும் நம்பிக்கையை சாரணர்களின் மனதில் விதைத்தோம்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக பொறுப்பேற்றப் பிறகு நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டோம். 75ஆவது சுதந்திர தினத்தில் மூவர்ணக் கொடியேற்றி, பத்தாண்டுகளாக தமிழ்நாடு சாரணர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த பயிற்சி சான்றிதழ்களை அவர்களுக்கு வழங்கி உற்சாகப்படுத்தினோம்.

தொடர்ந்து 2022 ஜனவரி 26இல் நடைபெற்ற குடியரசு தின விழாவிலும் கலந்துகொண்டு தேசிய அளவில் சிறப்பாக செயலாற்றிய நமது மாநில சாரணர்களுக்கு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தோம். அப்போது பேசிய சாரணர்கள் 'தலைமையகத்தில் பத்தாண்டுகளாக இதுபோன்ற விழாக்கள் நடைபெறாமல் இருந்தது. எங்களுக்கான சான்றிதழ்களைப் பெற 10 ஆண்டுகளாக காத்திருந்தோம். முந்தைய அரசு அவர்களுக்கான உரிமையை நிலைநாட்டத் தவறிவிட்டார்கள்' என்பன போன்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர் பொறுப்பிற்கு தேர்தல் நடத்துவது என முடிவானது. ஆனால் சாரணர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கையால் போட்டியின்றி ஒருமனதாக என்னை தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். 2022 ஆகஸ்ட் 26 அன்று தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

2022 செப்டம்பர் 12 அன்று தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டேன். தலைவருக்கான உடையணிந்து நான் சென்ற முதல் இடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இல்லம்தான். சாரணர் உடையில் என்னைப் பார்த்த எனது அரசியல் ஆசான் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். அவர் எனக்கு இட்ட கட்டளையை செயல்படுத்தத் தொடங்கிவிட்டேன் என்பதை சொன்னேன். 'தெரியும்...' என்று மட்டும் சொன்னார். சாரணர் உடையணிந்து எனது முதல் சாரணர் வணக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு செலுத்தினேன். அதே மகிழ்ச்சியோடு தலைவர் பொறுப்பேற்கும் நிகழ்விற்கு சென்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயின்ற எம்.சி.சி பள்ளியில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட கலை அரங்கத்தில் தமிழ்நாடு பாரத சாரணர் சாரணியர் இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

தொடர்ந்து சாரணர் இயக்கத்தினரின் ஆலோசனையின்படி இயக்கத்திற்கான செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தினோம்.

**பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில்(2022-2023) "தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் சார்பில் மண்டல அளவிலும், மாநில அளவிலும் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பெருந்திரளணி(Jamboree) நடத்தப்படும். இதனால் பள்ளி மாணவர்களிடையே தலைமை பண்பு, நல்லொழுக்கம் மற்றும் தன்னம்பிக்கை வளரும்"** என அறிவித்தோம். இந்த அறிவிப்பு தமிழ்நாட்டு சாரணர்களுக்கு புது இரத்தம் பாய்ச்சியது. 'சட்டமன்றத்தில் சாரணர்கள் பற்றி பேசி அறிவிப்பு வெளியிட்டது நீங்கள் மட்டும்தான்' என்றார்கள் சாரணர்கள். சாரணர் பற்றி உரையாற்றி அதை அவைக்குறிப்பிலும் ஏற்றினோம் என்பதில் பெருமை அடைந்தோம்.

மானியக் கோரிக்கை அறிவிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்தினோம். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனமண்டலங்களைப்பிரித்துமண்டலபெருந்திரளணிகளை நடத்தினோம். பெருந்திரளணியை அம்மாவட்ட அமைச்சர் பெருமக்களுடன் இணைந்து தொடங்கிவைத்து மாநில செயற்குழுக் கூட்டங்களையும் நடத்தினோம். எங்களின் இலக்கு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைரவிழாவை நோக்கிய பயணமாக இருந்தது. ஒவ்வொரு செயற்குழுக் கூட்டத்திலும் வைரவிழாவைப் பற்றி ஆலோசனை மேற்கொண்டோம்.

அதற்காக பல்வேறு பகுதிகளில் நடைபெறும் ஜாம்பூரி (Jamboree) எனப்படும் பெருந்திரளணியைப் பார்வையிடுவதற்காக செல்லத் தொடங்கினோம். 2022 டிசம்பர் 24 அன்று கர்நாடகா மாநிலம் மங்களூரில் நடந்த சாரண சாரணியர் இயக்கத்தின் சர்வதேச பெருந்திரளணியில் கலந்து கொண்டோம். 2023 ஜனவரி 7ஆம் தேதி இராஜஸ்தான் மாநிலம் பாலி மாவாரில் நடைபெற்ற சாரண சாரணியர் இயக்கத்தின் 18'வது தேசிய பெருந்திரளணியில் தமிழ்நாடு நாள் கொண்டாட்டத்தில் எனது தலைமையில் தமிழ்நாடு மாநில மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு சாரணர்களின் அணிவகுப்பு அங்கிருந்த தேசிய நிர்வாகிகளையும், மற்ற மாநில சாரணர்களையும் வெகுவாக கவர்ந்தது. நமது மாணவச் செல்வங்களை பல்வேறு மாநிலத்தவர்களும் அரவணைத்துப் பாராட்டினார்கள். நமது இலக்கை நோக்கி வெற்றிகரமாக செல்கிறோம் எனும் நம்பிக்கை ஏற்பட்டது.

இதற்கிடையில் நான்கு மண்டல பெருந்திரளணியை




நடத்தி முடித்த பின்னர் மாநில அளவிலான பெருந்திரளணியை நடத்துவது என முடிவெடுத்து அதற்கான ஆயத்தப் பணிகளிகளிலும் ஈடுபட்டிருந்தோம். சென்னைக்கு அருகே மாநில அளவிலான பெருந்திரணியை நடத்துவது என முடிவு செய்து திருப்போரூரில் சாரணர்களை ஒருங்கிணைத்தோம். 2023 ஜனவரி 27ஆம் தேதி மாநில அளவிலான பெருந்திரளணியைத் தொடங்கிவைத்தோம்.

தொடர்ந்து அதே அரங்கத்தில் எனது தலைமையில் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் சிறப்பு செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. சாரணர்களாகிய நாங்கள் அனைவரும் மிகுந்த நம்பிக்கையோடு அக்கூட்டத்தில் கலந்துரையாடினோம். மண்டல அளவிலான பெருந்திரளணி, மாநில அளவிலான பெருந்திரளணி என அனைத்தையும் வெற்றிகரமாக முடித்த நம்பிக்கையில் உரையாடினோம். அக்கூட்டத்தில் இருந்த அனைவரின் எதிர்பார்ப்பாக 'பாரத சாரண சாரணியரின் தேசிய அளவிலான ஜாம்பூரியை தமிழ்நாடு நடத்துமா?' என்பதாகத்தான் இருந்தது. அதற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கான முயற்சியில் ஒருமனதாக இறங்கினோம்.

வைரவிழாவை நடத்துவதற்கான அனுமதியை பெற முயற்சிகளை மேற்கொள்வது என முடிவெடுத்தோம். பாரத சாரண சாரணிய இயக்கத்தின் தலைமையகத்தின் கதவுகளை தமிழ்நாடு சாரணத் தலைவர்கள் தட்டத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் பல்வேறு பள்ளிகளில் இருந்தும், சாரண மாநிலங்களைச்(Scouts States) சேர்ந்தவர்களின் சார்பாக நடைபெற்ற பெருந்திரளணியில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அழைப்புகள் வந்தவண்ணம் இருந்தது. இந்த அழைப்புகள் எங்களுக்கு புத்துணர்வைக் கொடுத்தது.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
அமைச்சர்
பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு அரசு



திருச்சி பொன்மலையில் நடைபெற்ற 20'வது அகில இந்திய இரயில்வே சாரண சாரணியர் பெருந்திரளணியில் கலந்துகொண்டோம். தொடர்ந்து பள்ளிகள் அளவிலும் சாரணர் விழாக்கள் நடைபெற்றது. தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் புதிய உத்வேகத்தோடும், மகிழ்ச்சியோடும் செயல்படத் தொடங்கினார்கள்.

**'வைரவிழாவை நடத்துவது குறித்து அனுமதி கேட்டுள்ளோம்' எனும் தகவலை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் சொன்ன போது, 'கலைஞர் நூற்றாண்டையும் கொண்டாட முடியுமா?' எனும் கேள்வியையும் என் முன்னால் வைத்தார்.**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கேள்வியை எனக்கான ஆணையாக எடுத்துக்கொண்டேன். சாரணர் இயக்க நிர்வாகிகளிடம் அதை தெரிவித்து தேசிய தலைமையிடம் இருந்து அனுமதியை பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமாறு தெரிவித்தேன்.**

தொடர்ந்து வந்த மானியக் கோரிக்கையில் 'கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நடத்தப்படும்' எனும் அறிவிப்பையும் வெளியிட்டேன். தொடர்ந்து இரண்டு மானியக் கோரிக்கையிலும் சாரணர்கள் தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட்டதில் தமிழ்நாட்டின் சாரணர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களின் மகிழ்ச்சியை என்னிடம் பகிர்ந்துகொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

2024 ஜனவரி 12 அன்று எனது தலைமையில் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் சிறப்பு செயற்குழுக் கூட்டம் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைமையகத்தில் நடைபெற்றது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் "கலைஞர் 100" எனும் தலைப்பிலான சிறப்புப் பெருந்திரளணி குறித்து ஆலோசனை மேற்கொண்டோம்.

இம்முயற்சியில் ஈடுபட்டிருந்த அதே நேரத்தில் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கானசெயல்பாடுகளைமேற்கொண்டோம். 2024 ஆகஸ்ட் 3 அன்று மாநில செயற்குழுக் கூட்டத்தை நடத்தினோம். அக்கூட்டத்தில் 'தமிழ்நாடு சாரணர்களின் எண்ணிக்கையை 12 இலட்சமாக உயர்த்துவோம்' போன்ற தீர்மானங்களை நிறைவேற்றினோம்.

பெருமுயற்சிக்கு பிறகு 'வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டின் நினைவாக பெருந்திரளணியை தமிழ்நாடு நடத்தலாம்' எனும் அனுமதி தேசிய தலைமையிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. 2024 அக்டோபர் 3 அன்று தேசிய ஆணையர் திரு.கே.கே. கந்தேல்வால் அவர்கள் எனது முகாம் அலுவலகத்திற்கே நேரடியாக வருகை புரிந்து ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்.

இக்கடிதம் கிடைக்கப்பெற்ற மறுநாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர்களைச் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். அப்போது ஒப்புதல் கடிதம் கிடைக்கப்பெற்றதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து வாழ்த்துகள் பெற்றுக்கொண்டேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் தெரிவித்து வாழ்த்துகளைப் பெற்றுக்கொண்டேன்.

பாரத சாரண சாரணிய இயக்கத்தின் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணியை வெற்றிகரமாக நடத்துவதற்கு முழுவீச்சில் களத்தில் இறங்கினோம்.

மாநிலத்தின் தலைவர் எனும் முறையில் அல்லாமல் ஒரு சாரணர் என்கிற முறையில் 'எனது திருச்சி மாவட்டத்தில் நடத்த வேண்டும்' எனும் எனது கோரிக்கையை அனைத்து சாரணர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் சாரணர்கள் கலந்துகொள்வார்கள். பன்னாடுகளில் இருந்தும் சாரணர்கள் வருகை தருவார்கள். கிட்டத்தட்ட 20000 பேர்களுக்கு மேலே சாரணர்கள் வருவார்கள் எனும் போது அதற்கான இடம் திருச்சி மாவட்டத்தில் எங்கே இருக்கிறது. அரசுக்கு சொந்தமான இடமாக தேர்வு செய்ய வேண்டும் எனும் எண்ணத்திலும் இடத்தினை தேடிக்கொண்டிருந்தோம். அச்சூழலில்தான் மணப்பாறை சிப்காட் பகுதியினை பயன்படுத்தலாம் எனும் யோசனை மாவட்ட அரசு அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டது. சிப்காட் பகுதியாக இருந்ததால் மின்சாரம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. சாரணர் இயக்கத்தின் மூத்தோர்கள் பலருக்கும் அவ்விடம் பொருத்தமானதாகத் தோன்றியது. ஆனால் அவ்விடத்தை முழுவதுமாக மாற்றி அமைக்க வேண்டிய சூழல் இருந்தது. முழுமனதோடு அதற்கான பணிகளிலும் ஈடுபடத் தொடங்கினோம்.




இவ்விழாவை குறித்து ஆலோசிப்பதற்காக செயற்குழுக் கூட்டங்களையும் தொடர்ந்து நடத்தினோம். சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள நிர்வாக அலுவலகத்தை எங்களுக்கான அலுவலகமாக மாற்றிக்கொண்டோம். இதற்கு ஒப்புதல் அளித்த சிப்காட் அலுவலர்கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கினார்கள். சிப்காட் நிர்வாக அலுவலக கட்டடத்தில் செயற்குழுக் கூட்டங்களை நடத்தி அன்றாட நிகழ்வுகள் குறித்து, அடுத்தகட்ட நிகழ்ச்சிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டோம்.

**விழாவிற்கான சின்னத்தை வடிவமைக்க முடிவெடுத்து, தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு வடிவில் சின்னத்தை வடிவமைத்தோம்.**

**விழாவின் தலைவராக மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களை தேர்வு செய்தோம். அதனை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து ஒப்புதலும் பெற்றோம். தஞ்சாவூரில் 2024 நவம்பர் 7 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிகழ்வின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதே மேடையில் விழாவின் சின்னத்தையும், விழா மலரையும் வெளியிட்டுச் சிறப்பித்தார்.**

மணப்பாறை சிப்காட் பகுதியில் முழுவீச்சில் பணிகளும் தொடங்கியிருந்தன. முதலில் அவ்விடத்தில் அதிகமிருந்த கருவேல மரங்களையும், புதர்களையும் அகற்றி சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொண்டார்கள் நமது அதிகாரிகளும், பணியாளர்களும். தேசிய தலைமையில் இருந்து அனுபவம் வாய்ந்த சாரணர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களின் ஆலோசனையின்படி கூடாரங்களையும், கழிவறைகளையும், சாலைகளையும் அமைக்கும் பணிகளுக்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கினோம்.

சாரணர் இயக்கத்தை சேர்ந்த மாநில நிர்வாகிகளும், மாவட்ட அரசு அலுவலர்களும் சிப்காட் நிர்வாக அலுவலக கட்டடத்தில் தங்கி தினமும் பணிகளை கவனிக்கத் தொடங்கினார்கள். 2025 ஜனவரி 28ஆம் தேதி விழா தொடங்குகிறது என அறிவிப்பு வெளியிட்டோம். அதற்குள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடிக்க வேண்டும். டிசம்பர் மாதம் முதல் தொடர் ஆய்வுகளையும் சிப்காட் பகுதியில் மேற்கொண்டேன்.

இந்த மாபெரும் விழாவை பள்ளிக் கல்வித்துறை மட்டுமே ஒருங்கிணைத்து நடத்துவது என்பது இயலாத ஒன்று. கூட்டு முயற்சிதான் இவ்விழாவின் வெற்றிக்கு அடித்தளமிடும் என்பதை நன்கு உணர்ந்திருந்தோம். இவ்விழாவின் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அனைத்துத் துறை அலுவலர்களும் களத்தில் இறங்கி பணியாற்றத் தொடங்கினார்கள்.

விழாவின் துணைத் தலைவர்களாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முனைவர் கே.என்.நேரு, பொன்முடி, எ.வ.வேலு, தங்கம்தென்னரசு, மா. சுப்பிரமணியம், எஸ்.எஸ்.சிவசங்கர், செந்தில்பாலாஜி, டி.ஆர்.பி.ராஜா ஆகியோரும் திருச்சி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் துரை வைகோ அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இவர்களுக்கு சாரணர்களின் Scarf அணிவித்து மரியாதை செய்தோம். விழாவின் துணைத் தலைவர்களும் தங்களின் துறை சார்ந்த அதிகாரிகளிடம், சிப்காட் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அன்றாடப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்கள். துணைத் தலைவர்களின் ஒத்துழைப்பு இவ்விழாவின் வெற்றிக்கு மிகப்பெரிய பலமாக அமைந்தது.

விழா தொடங்குவதற்கு சில நாட்கள் முன்னர் கொள்கை எதிரிகளால் தவறான வதந்திகள் பரப்பப்பட்டது. 'விழா ஏற்பாடுகள் சரிவர நடைபெறவில்லை. 20000 பேர் வருவார்களாம்... ஆனால் அதற்குரிய கட்டமைப்பு இன்னும் முடிவடையவில்லை' எனும் செய்திகள் உலா வந்தது.

அந்த செய்தி உலா வந்த சமயத்தில் மணப்பாறை சிப்காட் வளாகத்தில் 1056 சதுர கி.மீ. பரப்பளவில் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய பரப்பளவில் நடைபெறும் முதல் பெருந்திரளணி இதுவே ஆகும்.

அதன் கட்டமைப்புகள் குறித்த சில தகவல்களை இங்கே தருகிறேன்:

- **பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழாவில் முதல்முறையாக BIO-Toilets பயன்படுத்தப்பட்டுள்ளது. 2100 பயோ கழிப்பறைகள் நிறுவப்பட்டிருந்தது.**
- **2000 குளியலறைகள் நிறுவப்பட்டிருந்தது.**
- **24 மணி நேரமும் இயங்கும் 2 மருத்துவமனைகளும், 15 துணை மருத்துவமனைகளும் அமைக்கப்பட்டிருந்தது.**
- **சாரணர்கள் தங்குவதற்காக மொத்தம் 2,422 கூடாரங்கள்...**
- **72 சமையல் செய்யும் கூடங்களும், 30க்கும் மேற்பட்ட உணவு அருந்தும் கூடங்களும்...**
- **350க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமிராக்கள்...**
- **அவசர உதவிக்காக 15க்கும் மேற்பட்ட அவசர ஊர்திகளும் தயார் நிலையில் இருந்தன.**

இந்தளவிற்கு கட்டமைப்புகள் வசதிகள் உருவாக்கப்பட்டிருந்தது அறியாமலோ அல்லது அவர்களின் வழக்கமான கோயபல்ஸ் முறையிலோ வதந்திகள் பரப்பினார்கள். அந்த வதந்தி ஒருசில மணி நேரங்கள் கூட நீடிக்கவில்லை.

பொய் செய்தி பரப்பியவர்களுக்காக அல்ல! நமது மக்களுக்காக இன்னும் சில தகவல்களை பகிர்ந்து கொள்கிறேன்.

- பொதுவாக இதுபோன்ற பிரமாண்ட சாரணர் முகாம் அமைப்பதற்கு 8 அல்லது 9 மாதங்கள் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் அரசாணை வெளியிடப்பட்டு 45 நாட்களுக்குள் இந்த பிரமாண்ட ஏற்பாடுகளை செய்து முடித்துள்ளோம்.
- சாரணர் இயக்கத்தின் நிறுவனர் திரு.பேடன் பவுல் அவர்களின் 5ஆம் தலைமுறை வாரிசு Mr.David Robert Baden-Powell இந்த வைரவிழாவின் தொடக்க விழாவிற்கு வருகை புரிந்தார். தொடர்ந்து நிறைவு விழாவிலும் கலந்துகொண்டார்.
- 24 மணி நேரமும் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் பரிசோதிக்கப்பட்டது.

இவ்வளவு சிறப்புகளோடு முகாம் தயார் ஆனது. வைரவிழாவின் அழைப்பிதழையும் தயார் செய்திருந்தோம்.

விழா அழைப்பிதழை இந்திய ஒன்றியத்தின் மாண்புமிகு குடியரசுத் தலைவர் திருமிகு.திரௌபதி முர்மு அவர்களிடம் 2025 ஜனவரி 22 அன்று வழங்கினோம். '20000 சாரணர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவாக பெருந்திரளணி நடைபெறவுள்ளது' போன்ற சிறப்புகளை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் தெரிவித்தோம். 'கலைஞர் பெயரால் நடக்கும் இந்நிகழ்விற்கு வருகை தர முயற்சிக்கிறேன். நிதிநிலை அறிக்கை தாக்கல் இருப்பதால் உறுதியாக சொல்ல முடியவில்லை' என்பதை சொல்லி வாழ்த்துகளையும் தெரிவித்தார் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள்.

விழாவின் அழைப்பிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமும், விழாவின் தலைவர்- மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களிடமும் வழங்கி வாழ்த்துகள் பெற்றோம்.

பிற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் வருகை புரிந்த சாரண அணியினருக்கான வழிகாட்டிகளை நியமித்தோம். அவர்களை சென்னை, திருச்சி போன்ற இடங்களில் இருந்து முகாமிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்திருந்தோம். காவலர்கள் முகாமின் பல முனைகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

இந்த பிரமாண்ட ஏற்பாடுகளுக்கு காரணமானவர்கள் சாரண இயக்கத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகளும், திருச்சி மாவட்ட நிர்வாகமும்தான். திருச்சி மாவட்ட ஆட்சியர்பிரதீப்குமார் அவர்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக கடுமையான உழைப்பை செலுத்தினார். மைதானத்தை அழகாக வடிவமைப்பது தொடங்கி, சாரணர்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளாமல் பணிகளை முடுக்கிவிட்டார் மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் அவர்கள். அனைவரின் உழைப்பின் வியர்வையில் பிரமாண்ட முகாம் தயார் ஆனது.

தொடர்ச்சி நாளை